

ஈரோடு மாவட்டம் திண்டலில் அருள்மிகு திண்டல் வேலாயுதசாமி திருக்கோயில் வளாகத்தில் ஈஸ்வரன் கோவில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா அறங்காவலர் குழு தலைவர் திண்டல் வேலுச்சாமி தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துச்சாமி அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் எம்.கந்தசாமி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எல்லப்பாளையம் சிவக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ. செந்தில்குமார், க.சின்னையன், ப.க.பழனிசாமி , டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன், பகுதி கழக செயலாளர்கள் வில்லரசம்பட்டி முருகேசன், பொ.இராமச்சந்திரன், வி.சி.நடராஜன், குறிஞ்சி என்.தண்டபாணி கோவில் செயல் அலுவலர் சுகுமார், உபயதாரர்கள் இன்ஃப்ரா டெக்ஸ் சக்திவேல், செந்தில், சக்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தூத்துக்குடி மாவட்டம் – ஏரல் கிராமத்தில்

# தனியார் பட்டாசு ஆலை வெடி விபத்தில் - உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 2 -

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், குறிப்பன்குளம் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், குறிப்பன்குளம் கிராமத்திலுள்ள, தனியார் பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (31.8.2024) மாலை 5.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த வெடிவிபத்தில் முத்துகண்ணன் (வயது 21), த/பெ. கள்ளாண்ட நாடார் மற்றும் விஜய் (வயது 25), த/பெ. தங்கவேலு ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இந்த விபத்தில் செல்வம் (வயது 21), பிரசாந்த் (வயது 20), திருமதி.செந்தூர்கனி (வயது 45), திருமதி.முத்துமாரி (வயது 41) ஆகியோர் பலத்த காயமடைந்து திருநெல்வேலி மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த வெடிவிபத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் எனது (இல.பத்மநாபன்) தலைமையிலும், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் கீழ்கண்ட பட்டியல் படி நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச்செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம், அந்தந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இன்னாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு, கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க., ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் இடங்கள்

**சட்டமன்ற தொகுதி**
**126 மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி,**
நாள் : 03.09.2024 (செவ்வாய்) நேரம் : காலை 10.00 மணி
ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் :
உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றியம்,
உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம்,
உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம்,
தளி பேரூர்
இடம் : கிருஷ்ணகானம் திருமண மஹால், பொள்ளாச்சி சாலை, உடுமலைப்பேட்டை.
நாள் : 03092024 (செவ்வாய்) நேரம் : நண்பகல் 12.00 மணி,
ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் :
மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியம்,
மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம், மடத்துக்குளம் பேரூர்,
கணியூர் பேரூர்,
குமரலிங்கம் பேரூர்,
சங்கராமநல்லூர் பேரூர்.
இடம் : அக் ஷரா திருமண மண்டபம், கணியூர் சாலை, சோழாமாதேவி மேடு.

**இல.பத்மநாபன்**
செயலாளர்
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

# திருவொற்றியூரில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கல்!

சென்னை, செப்.2 –

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வெள்ளையன் செட்டியார் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி தலைமையாசிரியர் சுப்பையா முன்னிலையில் 283 மாணவ – மாணவியர்க்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக செயற்குழு உறுப்பினரும், ஜெய்கோபால் கரோடிய பெற்றோர் ஆசிரியர் கழக தலைவருமான வி.ராம நாதன், மாமன்ற உறுப்பினர்கள் கே.பி.சொக்கலிங்கம், கோமதி சந்தோஷ்குமார், 14–வது (அ) வட்டக் கழக செயலாளர் ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், ஜே.பி.சந்தான கிருஷ்ணன், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், கழகப் பேச்சாளர்கள் வாசு கருணாநிதி, டைலர் மணி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே. தேசிங்கு, துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம், ஆர். குமரன், எம்.எல்.வேலன், மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் பிரட் சுரேஷ், எம்.எஸ்.பாண்டியன், கே.செந்தில் எஸ.மூர்த்தி, அ.பாண்டியன், போட்டோ செந்தில், கே.செந்தில்குமார், ஜெ.ஆர்.டி.சேகர், எஸ். மூர்த்தி, மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கே.எஸ்.ஆர்.சேட்டு ஏற்பாட்டில்

# தருமபுரி மேற்கு ஒன்றியப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

தர்மபுரி. செப். 2-

தர்மபுரி கிழக்கு மாவட்டம் மேற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தளபதி அரங்கம், மாவட்ட கழக அலுவலகத்தில் ஒன்றிய அவைத்தலைவர் சி செல்வராஜ் தலைமையில் தர்மபுரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.ஆர்.சேட்டு ஏற்பாட்டில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ சுப்ரமணி மற்றும் தருமபுரி எம்.பி. ஆ.மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். மேலும் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள், இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல், மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல், நாடாளுமன்ற உறுப்பினர் வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதி க்கப் பட்டது.

உடன் ஒன்றிய நிர்வாகிகள் டி.எல்.காவேரி, தென்னரசு, லட்சுமணன், தண்டபாணி, பெரியசாமி, மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ஆறுமுகம், ரேணுகாதேவி மற்றும் பொதுக்குழு உறுப்பினர் நடராஜ், மகளிர் அணி முத்துலட்சுமி மருத்துவரணி டாக்டர் மாதப்பன், ஐ டி விங் உதயசூரியன் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளை செயலா ளர்கள், பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் , மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மயிலாடுதுறை மாப்படுகை நாராயணி மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசிலன், ஒன்றியச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஆர்.ராஜா, ஒன்றியக் குழு தலைவர் காமாட்சிமூர்த்தி, ஒன்றிய அவைத்தலைவர் எம்.பி.எம்.பாலு மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ் தலைமையில் நடந்தது. இதில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி மற்றும் பலர் உள்ளனர்

### நகரச் செயலாளர் இரா.மாரிமுத்து வரவேற்புரை!

# நாகை நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, செப். 2 -

நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகையில் டி.பி.ஜி.திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகரக் கழக அவைத் தலைவரும், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகையன் தலைமை தாங்கினர். நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து வரவேற்றார். மாவட்டக் கழக பொருளாளரும், மாவட்ட பிரதிநிதி மு.லோகநதன், நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர், வெற்றிலைகடைசிவா, சித்திராகுலோத்துங்கன், பொருளாளர் அபுபக்கர், மாவட்ட பிரதிநிதி ஆர். ரமணிஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌமன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், மாவட்டக் கழக துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன், மாநில சிறுபாண்மை அணி துணை செயலாளர் சாகுல் ஹமீது, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், தினேஷ், பி. முருகானந்தம், கமல், பாலமுரளி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ். என்.மோகன்தாஸ்.,

மாவட்ட சார்பு அணி துணைஅமைப்பாளர்கள் வள்ளி, கருப்பாயி, செல்வம், ஆர்.கே.பிரதீப், நிஜாம், செல்வா, செல்வம், குமார், மற்றும் வார்டு கழக செலயாளர்கள், நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகன், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

2024 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி தமிழகத்தில் 40க்கு 40 வெற்றிக் கனி பறித்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, நாகை நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராஜ் வெற்றிக்கு உழைத்திட்ட நாகை நகரக் கழக கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து நாகை நகர தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து கொள்வது என்றும், பல்வேறு நலதிட்டங்களை அறிவித்து செல்படுத்தி சிறப்பாக ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்ட மன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் நாகை நகரத்தில் உள்ள அனைத்து வார்டு கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்ட மன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்றும், நாகை நகரத்தில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டிய வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, வார்டு பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் நகரக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள் நகர கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. கூட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளான மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் திருப்பதி வெங்கடாஜலபதி, சாம் தான்பேட்டை பெரியம்அம்பலம், கோட்டைவாசல்படி சண்முகம் ஆகிய மூன்று பேருக்கும் நகர கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பொன்னாடை போர்த்தி, கலைஞர் திருஉருவ சிலை வழங்கி பாராட்டினார். முடிவில் நாகை நகரக் கழக துணைச் செயலாளர் வெற்றிலைகடைசிவா நன்றி கூறினார்.




நாகை மாவட்ட நாகை நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகையில் டி.பி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், சித்திராகுலோத்துங்கன், வெற்றிலைகடைசிவா, அபுபக்கர், ரமணி மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் பொ. பத்மநாபன்
### செப்டம்பர் 2 (1991)



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**